www.tamilarangam.net

# மறுப்பறிக்கை மர்மம்! மழுப்பலின் மொத்தவடிவம்

**தோழர்களே!**

**அம்பாறை சென்ரல் காம்ப் காவல் நிலையம்** தாக்குதல் சம்பந்தமாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் வெளியிட்டுள்ள [மறுப்பு] அறிக்கை தெளிவாக இல்லாததாலும், அதில் எம்மீது எவ்வித ஆதாரமுமின்றி தெளிவற்ற முறையில் அபாண்டமான குற்றச்சாட்டை சுமத்துவதாலும் அதற்கு பதிலளிக்கும் முகமாக இப்பிரசுரத்தை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

பின் விளைவுகளைக் கணித்து அதற்கேற்ப திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதலானது எமக்கு பெருவெற்றியை தந்த வேளையில் கழகமானது தனது சகல செய்தித் தொடர்பு சாதனங்கள் மூலமும் தாமே அத்தாக்குதலை நடத்தியதாக பெரியளவில் உரிமை கொண்டாடியது மட்டுமல்லாமல் ஏதோ புரட்சிப் பயணத்தில் மிக முக்கியமானதைச் சாதித்து விட்டதாகவும் ஆர்ப்பரித்தது. ஆர்ப்பரிப்பு இன்னமும் அடங்காத இவ்வேளையில், இங்குள்ள கழகத்தோழர்கள் இப்பொழுதும் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் கழகத்தின் அதிகாரபூர்வ ஏடான புதிய பாதையில் செயலதிபரின் பெயரால் வெளியான அறிக்கையானது மழுப்பலின் மொத்த வடிவமாகக் காட்சியளிப்பது மட்டுமல்லாமல், மக்களுக்கும் ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவித்துள்ளது. ஆகஸ்ட் மாதம் வெளிவந்த புதிய பாதையில் 9-ம் பக்கத்தில் [இறுதிப் பந்தி வலது பக்கம்]காணப்படும் அறிக்கையைக் கீழே காண்க.

## அறிக்கை

**"கடந்த திங்கள் அம்பாறைக் காவல் நிலையத்தை தாக்கியதாக உரிமைகோரி ஒரு தவறுதலான கழகத் துண்டறிக்கை வெளிவரப் பெற்றது. இத்தவறுக்கு மனம் வருந்துகின்றோம். இத்தாக்குதல் நடத்தியவர்கள் கழகத்தின் பெயரை தவறான முறையில் பயன் படுத்தியதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்"**

எமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நாம் மேற்கொள்ளும் தாக்குதல்கள் முழுமையான போராட்டத்துடன் ஒப்பிடும் பொழுது நாசுதட்டும் நிகழ்ச்சிகளாகவே கணிக்கப்பட்டு; அவற்றுக்கு இதுவரை எம்மால் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுமில்லை, மக்களை மயக்கி கவர்ச்சி மாயைக்கு இழுத்து சென்றதுமில்லை. இதற்கமையவே சென்றல் காம்ப் காவல் நிலையத்தை நாம் தாக்கிய போதும் உரிமைகோரும் புராணங்களையோ, அன்றி பணம் கொடுத்து பேட்டி கொடுக்கும் வழிகளையோ கையாளவில்லை என்பதை முதலில் தெரியப்படுத்த விரும்புகிறோம். எமது இத்தகைய நிலைப்பாட்டை தமக்கு சாதகமாக பயன்படுத்த நினைத்தோ அன்றி அவர்களது தாக்குதல் பிரிவுக்கும் பிரச்சாரப் பிரிவுக்கும் இடையில் ஏற்பட்ட கோளாறோ தெரியவில்லை அவர்களை உரிமைகோர வைத்து விட்டது. உரிமை கோரியவர்கள் உண்மையை மக்கள் உணர ஆரம்பித்ததும் மக்களை எண்ணிப் பயந்தனர் போலும், மறுப்பறிக்கையை மழுப்பலாக சிறிய அளவில் (இவ் அடக்கத்தனத்தை உரிமை கோரும் போது கடைப்பிடித்திருந்தால் பெருமைப்படக் கூடியதாய் இருந்திருக்கும்) வெளியிட்டனர். இதில் வெளிக் காட்டப்பட்ட இவர்களுடைய சுய (கர்வம்) கௌரவத்தின் பாதிப்பானது மறுப்பறிக்கை பெரிய அளவில் வருவதையோ அன்றி கழகத்தின் சகல மட்டங்களிலும் பரவுவதையோ தடுத்துவிட்டது. இந்தியாவில் வெளியிடப்பட்ட செயலதிபரின் மறுப்பறிக்கை இங்குள்ள கழகத் தோழர்களுக்கு எட்டவில்லையோ அல்லது ஏற்கமுடியாமல் இருக்கின்றது போலும். இன்றும் தொடர்ந்து உரிமை கோரி பிரச்சாரம் செய்வது மட்டுமன்றி சில இடங்களில் எமது தோழர்களை மிரட்டுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இது கழகத்தினது அரசியல் நாகரீகத்தை அப்பட்டமாக படம்பிடித்துக் காட்டுகின்றது. புரட்சிகர மார்க்சிச சித்தாந்தத்தைப் பின்பற்றி சோசலிச தமிழீழம் அமைப்பதற்கென கழகம் அமைத்த இவர்கள் கசப்பான உண்மைகளை வெளிப்படையாகச் சொல்ல பின் வாங்கியும், பொய்யான பிரச்சாரங்கள் மூலம் மக்களை வென்றெடுக்கமுடியும் எனக்கருதும் இவர்கள் எப்படி ஒரு தூய கம்யூனிஸ்டுகளாக இருக்க முடியும்?

www.tamilarangam.net

“கசப்பான உண்மைகளை நேரடியாக மக்கள் மத்தியில் எடுத்துரைத்ததாலேயே மாபெரும் ஏகாதிபத்தியத்தை எங்களால் தோற்கடிக்க முடிந்தது” என்று கூறிய வியட்நாம் தந்தை ஹோ-சிமின் போன்றோரால் பெருமையடைந்த கம்யூனிச உலகம் இவர்களாலும் பெருமையடையப் போகிறதாம். கழகத்துக்கு ஏற்பட்ட இந்நிலையை எண்ணும் போது எமக்கு ஒருபுறம் வேதனை தருவதாகவும், மறுபுறம் வளர்ந்த ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தில் அதுவும் மார்க்சிச, லெனினிச, மாவோயிச சித்தாந்தங்களில் இரண்டறக் கலந்த முன்னணிப் புரட்சித் தோழர்களால் வழிநடத்தப்படும் கழகத்தில் இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறுவது எமக்கு வியப்பை அளிக்கின்றது.”

தாக்குதலை நடத்தியவர்கள் கழகத்தின் பெயரைத் தவறான முறையில் பயன் படுத்தியதாக எம்மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. கழகத்தின் பெயரை எப்போது? எப்படி? தவறான முறையில் நாம் பயன் படுத்தினோம் என்பதை தெளிவாக, விளக்கமாக ஆதாரத்தோடு கழகத்தினரால் நிரூபிக்க முடியுமா? அல்லது உரிமைகோரி வெளியிட்ட “சிறீலங்கா அரசின் பொய்யான பிரச்சாரம்” எனத் தலைப்பிட்ட பிரசுரத்தை நாம் வெளியிட்டதாகக் கூறப் போகின்றார்களா? இதுவரையில் நாம் எச்சந்தர்ப்பத்திலும் எவ்வடிவத்திலும் கழகத்தின் பெயரை பயன்படுத்தவில்லை. அவ்வாறான அவசியம் எமக்கு ஏற்பட்டதுமில்லை என்பதைத் திட்டவட்டமாக அறியத்தருகின்றோம். எம்மீது தெளிவற்ற முறையில் ஆதாரமின்றி சுமத்தப்பட்ட இக் குற்றச்சாட்டு எமக்கு, இவர்கள்மீது பல சந்தேகங்களை எழுப்புகின்றது. அநாவசியமாக வலிய எம்மீது இவர்கள் பழிசுமத்துவதை நோக்கும் போது இவர்களுடைய ஐக்கிய முன்னணிக்கான கூப்பாடு வெறும் ஒப்பாரியாகவே எமக்கு துலங்குகின்றது.

**கழகம் தந்த மறுப்பறிக்கை!**

**மக்களுக்கு பெரும் குழப்பறிக்கை!!**

**பேரவை தரும் பதிலறிக்கை!**

**உண்மையை உணரவைக்கும் தோழமை அறிக்கை!!**

**தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்